வெளியீட்டெண் : 109

நபிமார்கள் நாதாக்கள் செய்த துஆக்கள்-பிரார்த்தனைகள்

தொகுப்பு:
மௌலானா குத்புத்தீன் அஹ்மத் பாகவி .

இஸ்லாமிய நிறுவனம் ட்ரஸ்ட்
78, பெரம்பூர் நெடுஞ்சாலை
சென்னை - 600 012.
போன்: 642 4401, 642 6181

© ISLAMIC FOUNDATION TRUST - 1995

Prayers of Prophets (Tamil)
Nabimargal Nadhakkal Seidha Duakkal

First Edition : April 1995

ISBN 81 232 0083 8

Price: Rs.5.00

Compiled by Moulana Kuthbuddeen Ahmed Baqavi

Published by **ISLAMIC FOUNDATION TRUST**
78, Perambur High Road
Madras 600 012. India.
Phone: 642 4401, 642 6181

Typesetters: Sumathi Lasers, Madras-6. ☎ 8523424
Printed in India by Offset at Hindustan Offset, Madras-14.

بِسْمِ اللهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

பதிப்புரை

''துஆ'' என்பது வணக்கங்களின் சத்தும் சாரமுமாகும் என்று பெருமானார் (ஸல்) கூறியுள்ளார்கள்.

ஒரு மனிதன் மற்றொருவரிடம் நேரிடையாகப் பேசுவது போல் துஆ அடியார்களை படைத்தவனோடு இணைப்பதில் முக்கியப் பங்கு வகிக்கிறது. அடியான் தன்னிடமுள்ள அனைத்துக் குறைபாடுகளையும், தனக்கு நேரும் துன்பங்களையும், இடர்பாடுகளையும், உள்ளத்தின் வேதனையையும் வெளிப்படையாகவே தன் இறைவன் முன்னால் எடுத்துரைக்கின்றான்.

சந்தடி நிறைந்த மனித வாழ்க்கையிலிருந்து முற்றிலும் ஒதுங்கி இருக்கிறான் ஒரு மன்னன். தன்னால் படைக்கப்பட்ட படைப்பினங்களோடு அவனுக்கு எந்தத் தொடர்பு மில்லை; அல்லது அவன் சில விதிகளை ஏற்படுத்தி ஒரு தானியங்கி இயந்திரத்தை இயங்கச் செய்து விட்டான். இனி அவன் எந்த விவகாரத்திலும் தலையிடவே மாட்டான் என்பது போல் அல்ல இஸ்லாத்தின் இறைக் கொள்கை. இஸ்லாம் கூறும் இறைவன் பேரண்டம், படைப்பினம், அடியார்கள் அனைவரையும் பொருட்படுத்தாமல் கண்ணுக்கு எட்டாத உயர்ந்த பீடத்தில் அமர்ந்திருக்கவில்லை. அவன் ஒவ்வொரு வினாடியும் பேரண்டத்தில் தன் செல்வாக்கைப் பதிக்கின்றான். அவன் யானை முதல் எறும்பு வரையுள்ள உயிரினங்களின் தேவைகள் நிறைவேற ஏற்பாடு செய்கின்றான். அவன் பொருள்கள் மற்றும் ஆற்றல்களின் மதிப்பீடுகளை நிர்ணயிக்கின்றான். ஒவ்வொரு உயிரினத்துக்கும் அது செயல்படும் வழிமுறையை வரையறுக்கின்றான். அவன்

மனிதர்கள் துன்பப்படும்போது அவர்களின் முறையீடுக ளைச் செவியேற்கின்றான். வாழ்வின் ஒவ்வொரு கட்டத்தி லும் அவர்களுடனேயே இருக்கின்றான். ''என் அடியார் களே! என்னை நீங்கள் அழையுங்கள். உங்களின் அழைப்பை நான் செவியேற்கின்றேன்'' என்று தானே அழைக்கின்றான். மேலும் ''நான் உங்களுக்கு மிக அருகிலேயே இருக்கிறேன்'' என்றும் கூறுகின்றான்.

முஸ்லிம்களென்ன, இறைநிராகரிப்பாளர்கள், சிலை வணக்கக்காரர்கள் ஆகியோரின் அழைப்பைக்கூட அவன் செவியேற்கின்றான். குறிப்பாக அவர்கள் அநீதிக்கு ஆட்படும் போது!

தன்னுடைய அடியார்கள் தன்னிடம் எதனையும் கோரி நிற்பது, பிரார்த்தனைக் கோலத்தில் கையேந்திய வண்ணம் காட்சியளிப்பது இறைவனுக்கு மிக விருப்பமான செயலா கும். ஏன், இறைவனேகூட ஒவ்வொரு வேளையிலும், அவசியம் நேரும்போதும் எப்படிப் பிரார்த்தனை புரிவது என்பதைத் தன் அடியார்களுக்குக் கற்றுத் தந்துள்ளான்.

இறைவனால் கற்றுத்தரப்பட்ட துஆக்கள் குர்ஆனில் உள்ளன. இவை சிறந்த எடுத்துக்காட்டுகளாய் விளங்குவன. அத்துடன் மிகவும் பயனுள்ளவையாய் திகழ்வன.

துஆக்கள் ஏற்கப்படுவதற்கு நிபந்தனையாக ஹதீஸ் களில் கூறப்படுவது உளம் ஒன்றித்து இறைவனை அழைப்ப துதான். தனக்குக் கிடைக்கவிருக்கும் ஒரு நன்மைக்காக பிற உயிரினங்களுக்கு - மனிதர்களுக்கு தீமையைக் கோரக்கூடிய வனாக மனிதன் இருத்தல் கூடாது.

துஆவின் பலன்கள் நான்கு வகையாக வெளிப்படுகின் றன.

1. துஆ உடனடியாக ஏற்கப்படுகிறது.

2. சற்று தாமதித்து, சரியான சந்தர்ப்பத்தில் அதன் பலன் ஏற்படுகிறது.

3. கோரியது ஒன்று என்றால் கிடைப்பது வேறு எனும் வகையில் வேறு ஏதேனும் நன்மை, பரிசு வழங்கப்படு கிறது.

4. துஆவின் பலாபலன்கள் இவ்வுலகில் வெளிப்படவில் லையாயின் வழிபாடுகளுக்கான புண்ணியங்கள் மறு மையின் வெற்றிக்காக சேர்த்து வைக்கப்படுகின்றன.

சுருங்கக் கூறின், எந்த துஆவும் வீணாவதில்லை என் பதே உண்மை.

மேலே கூறப்பட்ட உண்மைகளை நினைவில் வைத்த வண்ணம் குர்ஆனிலிருந்து திரட்டித் தரப்பட்ட துஆக்களை ஓதி வாருங்கள். அவற்றை நினைவில் இருத்த முயற்சி செய்யுங்கள். இறைவனோடு தொடர்பினை ஏற்படுத்திக் கொள்ள அவற்றைச் சாதனமாக்கிக் கொள்ளுங்கள்.

வல்ல அல்லாஹ் உங்களுக்கு சகல நலன்களையும், சகல செல்வங்களையும், யாவரிடத்தும் எவ்விடத்தும் கண்ணியத் தையும், மரியாதையையும், இம்மை - மறுமைப் பேறுகளை யும் வழங்குவானாக. ஆமீன்!

சென்னை-12
15.1.95

M.A.ஜமீல் அஹ்மத்
பொதுச் செயலாளர்
இஸ்லாமிய நிறுவனம்



அளவிலாக் கருணையும் இணையிலாக் கிருபையும்
உடைய அல்லாஹ்வின் திருப்பெயரால்...

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ۝١ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ۝٢ مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ۝٣
اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ ۝٤ اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ۝٥ صِرَاطَ
الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ۝٦

முதல் துஆ

பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம். அல்ஹம்து லில் லாஹி ரப்பில் ஆலமீன். அர் ரஹ்மானிர் ரஹீம். மாலிக்கி யவ்மித்தீன். இய்யாக நஅபுது வஇய்யாக நஸ்தயீன். இஹ்தி னஸ் ஸிராத்தல் முஸ்தகீம். ஸிராத்தல் லதீன அன் அம்(த்)த அலைஹிம் கைரில் மகளூபி அலைஹிம் வலள் ளால்லீன் ஆமீன்.

பொருள்: அளவிலாக் கருணையும், இணையிலாக் கிருபையும் உடைய அல்லாஹ்வின் திருப் பெயரால்...

எல்லாப் புகழும் அனைத்துலகிற்கும் 'ரப்' - அதிபதி ஆகிய அல்லாஹ்வுக்கே உரியதாகும். அவன் மாபெரும் கருணையாளனாகவும், தனிப் பெரும் கிருபையாளனாகவும், இறுதித் தீர்ப்புநாளின் அதிபதியாகவும் இருக்கின்றான். உனக்கே நாங்கள் அடிபணிகின்றோம். (இபாதத் செய்கி றோம்) மேலும் உன்னிடமே நாங்கள் உதவி கேட்கிறோம். எங்களுக்கு நீ நேரான வழியைக் காண்பித்தருள்வாயாக! (அவ்வழி) எவர்களுக்கு நீ அருள்புரிந்தாயோ அவர்களின் வழி; உன்னுடைய கோபத்துக்கு ஆளாகாத மற்றும் நெறிதவ றிப் போகாதவர்களின் வழி.

சான்றோர் செய்த துஆ

رَبَّنَآ اَفۡرِغۡ عَلَيۡنَا صَبۡرًا وَّثَبِّتۡ اَقۡدَامَنَا وَانۡصُرۡنَا عَلَى الۡقَوۡمِ الۡكٰفِرِيۡنَ ۚ

ரப்(B)பனா அப்(F)ரிகு அலைனா ஸப்ரன் வஸப்(B)பித் அம்க்தா மனா வன்ஸுர்னா அலல் ம்கவ்மில் காம்பிரீன்.

பொருள்: ''எங்கள் இறைவனே! நீ எங்கள் மீது பொறுமையைப் பொழிவாயாக. எங்கள் பாதங்களை உறுதிப்படுத்துவாயாக! மேலும் இறைநிராகரிப்பாளர்களான இந்தக் கூட்டத்தினரை வென்றிட எங்களுக்கு உதவி செய்வாயாக.''

رَبَّنَا لَا تُؤَاخِذۡنَاۤ اِنۡ نَّسِيۡنَاۤ اَوۡ اَخۡطَاۡنَا ۚ رَبَّنَا وَلَا تَحۡمِلۡ عَلَيۡنَاۤ اِصۡرًا كَمَا حَمَلۡتَهٗ عَلَى الَّذِيۡنَ مِنۡ قَبۡلِنَا ۚ رَبَّنَا وَلَا تُحَمِّلۡنَا مَا لَا طَاقَةَ لَنَا بِهٖ ۚ وَاعۡفُ عَنَّا ۟ وَاغۡفِرۡ لَنَا ۟ وَارۡحَمۡنَا ۟ اَنۡتَ مَوۡلٰنَا فَانۡصُرۡنَا عَلَى الۡقَوۡمِ الۡكٰفِرِيۡنَ ۚ (2:250)

ரப்(B)பனா லா துஆகித்னா இன்னஸீனா அவ் அக்தம்ன்னா ரப்(B)பனா வலா தஹ்மில் அலைனா இஸ்ரன் கமா ஹமல் தஹு அலல்லதீன மின் ம்கப்(B)லினா.

ரப்(B)பனா வலா துஹம்மில்னா மாலா தாம்க(த்)த லனா பிஹி-வஅம்பு அன்னா வம்பிர்லனா வர்ஹம்னா அன்(த்)த மவ்லானா ம்பன்ஸுர்னா அலல் ம்கவ்மில் காம்பிரீன்.

பொருள்: ''எங்கள் இறைவனே! நாங்கள் மறந்து போயிருப்பினும், பிழை செய்திருப்பினும் நீ எங்களை (குற்றம்) பிடிக்காதே! எங்கள் இறைவனே! மேலும் எங்களுக்கு முன்

சென்றோர் மீது நீ பாரத்தை சுமத்தியது போல் எங்கள் மீதும் பாரத்தைச் சுமத்தி விடாதே! எங்கள் இறைவனே! மேலும் நாங்கள் தாங்க இயலாத பாரத்தை எங்கள் மீது சுமத்தி விடாதே! எங்களைப் பொறுத்தருள்வாயாக! எங்களுக்கு மன்னிப்பு வழங்குவாயாக! எங்கள் மீது கருணை பொழிவாயாக! நீயே எங்கள் பாதுகாவலனாவாய்! (சத்தியத்தை) நிராகரிக்கும் மக்களுக்கு எதிராக வெற்றி கொள்ள எங்களுக்கு உதவி செய்வாயாக!'' (2:286)

முன்னர் நம்பிக்கை கொண்டவர்களின் துஆ

رَبَّنَا لَا تُزِغْ قُلُوبَنَا بَعْدَ إِذْ هَدَيْتَنَا وَهَبْ لَنَا
مِنْ لَّدُنْكَ رَحْمَةً ۚ إِنَّكَ أَنْتَ الْوَهَّابُ ۝

ரப்(B)பனா லா துஸிஃ ஃகுலூபனா பஅத இத் ஹதய்தனா வஹப்லனா மி(ன்)ல்லதுன்க ரஹ்ம(த்)தன் இன்னக அன்தல் வஹ்ஹாப்(B)

பொருள்: ''எங்கள் இறைவனே! எங்களை நீ நேர்வழியில் செலுத்திய பின்பு எங்கள் இதயங்களை நேர்வழியிலிருந்து பிறழச் செய்திடாதே! மேலும் எங்களுக்கு உன் அருளிலிருந்து கொடை வழங்குவாயாக. நிச்சயமாக நீயே தாராளமாக வழங்குபவனாய் இருக்கின்றாய்.'' (3:8)

رَبَّنَا إِنَّنَا آمَنَّا فَاغْفِرْ لَنَا ذُنُوبَنَا وَقِنَا عَذَابَ النَّارِ ۝

ரப்(B)பனா இன்னனா ஆமன்னா ஃபஹ்ஃபிர்லனா துஹூப(B)னா வஃகினா அதாப(B)ன்னார்.

பொருள்: ''எங்களுடைய இறைவனே! நிச்சயமாக நாங்கள் உன் மீது நம்பிக்கை கொண்டோம். எனவே எங்களுடைய பாவங்களை நீ மன்னித்தருள்; இன்னும் நரக வேதனையிலிருந்து எங்களைக் காத்தருள். (3:16)

رَبَّنَا اغْفِرْ لَنَا ذُنُوْبَنَا وَإِسْرَافَنَا فِيْٓ أَمْرِنَا وَثَبِّتْ أَقْدَامَنَا
وَانْصُرْنَا عَلَى الْقَوْمِ الْكٰفِرِيْنَ ۝

ரப்(B)பனஃப்ஃபிர்லனா துனூபனா வ இஸ்ராஃபனா ஃபீ அம்ரினா வஸப்(B)பித் அஃக்தாமனா வன்ஸுர்னா - அலல் ஃகவ்மில் காஃபிரீன்.

பொருள்: ''எங்கள் இறைவனே! எங்கள் பாவங்களையும் பிழைகளையும் நீ மன்னித்தருள்வாயாக! எங்கள் பணிகளில் உன் வரம்பை மீறி நாங்கள் செய்தவற்றை நீ மன்னிப்பாயாக! மேலும் எங்கள் பாதங்களை உறுதிப்படுத்துவாயாக! சத்தியத்தை நிராகரிப்பவர்களை வெற்றி கொள்ள எங்களுக்கு நீ உதவி செய்வாயாக!'' (3:147)

முஹம்மது (ஸல்) அவர்கள் செய்த துஆக்கள்

اَللّٰهُمَّ مٰلِكَ الْمُلْكِ تُؤْتِي الْمُلْكَ مَنْ تَشَآءُ وَتَنْزِعُ الْمُلْكَ
مِمَّنْ تَشَآءُ ۚ وَتُعِزُّ مَنْ تَشَآءُ وَتُذِلُّ مَنْ تَشَآءُ ۖ بِيَدِكَ الْخَيْرُ ۖ
إِنَّكَ عَلٰى كُلِّ شَيْءٍ قَدِيْرٌ ۝ تُوْلِجُ الَّيْلَ فِي النَّهَارِ ۖ وَتُوْلِجُ النَّهَارَ فِي الَّيْلِ ۖ وَتُخْرِجُ الْحَيَّ مِنَ الْمَيِّتِ ۖ وَتُخْرِجُ الْمَيِّتَ مِنَ الْحَيِّ ۖ
وَتَرْزُقُ مَنْ تَشَآءُ بِغَيْرِ حِسَابٍ ۝

அல்லாஹும்ம மாலிகல் முல்கி துஃதில் முல்க மன் தஷாவு வதன்ஸிவுல் முல்க மிம்மன் தஷாவு வதுயிஸ்ஸு மன் தஷாவு வதுதில்லு மன்தஷாவு பி(B) யதிகல் கைரு இன்னக அலா குல்லிஷையின் ஃகதீர். தூலிஜுல் லைல ஃபின்னஹாரி வதூலி ஜுன்னஹார ஃபில் லைல். வதுக்ரி ஜுல் ஹய்ய மினல் மய்யித்தி வதுக்ரிஜுல் மய்யித்த மினல் ஹைய்யி வதர்ஜுஃகுமன் தஷாவு பிகைரி ஹிஸாப்(B)

பொருள்: ''அல்லாஹ்வே! ஆட்சியதிகாரம் அனைத்திற்கும் அதிபதியே! நீ நாடுவோருக்கு ஆட்சியைக் கொடுக்கின்றாய். மேலும் நீ நாடுகின்றவர்களிடமிருந்து ஆட்சியைப் பறிக்கின்றாய். நீ நாடுகின்றவர்களுக்கு கண்ணியத்தை வழங்குகின்றாய். மேலும் நீ நாடுகின்றவர்களை இழிவுபடுத்துகின்றாய். நன்மைகள் அனைத்தும் உன் கைவசமே உள்ளன. நிச்சயமாக நீ ஒவ்வொன்றின் மீதும் பேராற்றல் கொண்டவன். நீயே இரவை பகலில் கோக்கச் செய்கின்றாய், மேலும் பகலை இரவிலும் கோக்கச் செய்கின்றாய்; இன்னும் உயிரற்றதிலிருந்து உயிருள்ளதை நீயே வெளியாக்குகின்றாய். உயிருள்ளதிலிருந்து உயிரற்றதையும் வெளியாக்குகின்றாய். மேலும் நீ நாடுபவர்களுக்குக் கணக்கின்றி வழங்குகின்றாய்.''

(3:26, 27)

உள்ளம் உருக்கும் உத்தமர் துஆ

رَبَّنَا مَا خَلَقْتَ هٰذَا بَاطِلًا ۚ سُبْحٰنَكَ فَقِنَا عَذَابَ النَّارِ ۝
رَبَّنَآ اِنَّكَ مَنْ تُدْخِلِ النَّارَ فَقَدْ اَخْزَيْتَهٗ ۭ وَمَا لِلظّٰلِمِيْنَ مِنْ اَنْصَارٍ ۝
رَبَّنَآ اِنَّنَا سَمِعْنَا مُنَادِيًا يُّنَادِيْ لِلْاِيْمَانِ اَنْ اٰمِنُوْا بِرَبِّكُمْ فَاٰمَنَّا ۣ رَبَّنَا
فَاغْفِرْ لَنَا ذُنُوْبَنَا وَكَفِّرْ عَنَّا سَيِّاٰتِنَا وَتَوَفَّنَا مَعَ الْاَبْرَارِ ۝ رَبَّنَا وَ
اٰتِنَا مَا وَعَدْتَّنَا عَلٰي رُسُلِكَ وَلَا تُخْزِنَا يَوْمَ الْقِيٰمَةِ ۭ اِنَّكَ لَا تُخْلِفُ
الْمِيْعَادَ ۝

ரப்(B)பனா மா கலஃக்த ஹாதா பாத்திலா சுப்ஹானக ஃபகினா அதாபன்னார். ரப்(B)பனா இன்னக மன் துத்கிலின் னார ஃபகத் அக்ஸைத்தஹு வமா லிள் ளாலிமீன மின் அன்ஸார். ரப்(B)பனா இன்னனா ஸமிஃனா முனாதியன் யுனாதீ லில் ஈமானி அன் ஆமினூ பி(B) ரப்(B)பிகும் ஃபஆமன்னா ரப்(B)பனா ஃபஹ்ஃபிர்லனா துனூப(B)னா வகஃப்பிர் அன்னா ஸய்யிஆத்தினா வதவஃப்பனா மஅல் அப்(B)ரார். ரப்(B)னா வஆத்தினா மா வஅத்தனா அலா ருசுலிக்க வலா துக்ஸினா யவ்மல் கியாமத்தி இன்னக லா துக்லிஃபுல் மீஆத்.

பொருள்: ''எங்கள் இறைவனே! இவையனைத்தையும் நீ வீணாக (யாதொரு நோக்கமுமின்றிப்) படைக்கவில்லை. (வீணான செயல்களை விட்டு) நீ தூய்மையானவள். எனவே நரக வேதனையிலிருந்து நீ எங்களைக் காப்பாற்றுவாயாக! எங்கள் இறைவனே! நீ யாரை நரகத்தில் புகுத்தினாயோ, அவனை நீ உண்மையில் கேவலப்படுத்தி விட்டாய். மேலும் இப்படிப்பட்ட அக்கிரமக்காரர்களுக்கு உதவி செய்வோர் எவருமில்லை. எங்கள் அதிபதியே! இறைநம்பிக்கையின் பக்கம் அழைக்கக்கூடிய ஒருவரின் அழைப்பினை நாங்கள் செவியேற்றோம். 'உங்கள் இறைவனை ஏற்றுக் கொள்ளுங்கள்' என்று அவர் கூறினார். நாங்கள் ஏற்றுக் கொண்டோம். எனவே எங்கள் அதிபதியே! எங்கள் குற்றங்களை மன்னித்தருள்வாயாக! எங்களிடம் உள்ள தீமைகளை அகற்றுவாயாக! மேலும் எங்களை நல்லவர்களுடன் மரணிக்கச் செய்வாயாக! எங்களின் இறைவா! மேலும் தூதர்களின் வாயிலாக நீ அளித்த வாக்குறுதிகளை எங்களுக்கு நிறைவேற்றித் தந்தருள்வாயாக! மேலும் மறுமைநாளில் எங்களைக் கேவலப்படுத்தி விடாதே! நிச்சயமாக நீ வாக்குறுதி மீறாதவன் ஆவாய்''

(3:191 - 194)

கஅபா ஆலயத்தை கட்டி முடித்தபின் இப்ராஹீம் நபி (அலை) அவர்கள் செய்த துஆ

رَبَّنَا تَقَبَّلْ مِنَّا ۚ إِنَّكَ أَنْتَ السَّمِيعُ الْعَلِيمُ ۝ رَبَّنَا وَاجْعَلْنَا
مُسْلِمَيْنِ لَكَ وَمِنْ ذُرِّيَّتِنَا أُمَّةً مُسْلِمَةً لَكَ ۖ وَأَرِنَا
مَنَاسِكَنَا وَتُبْ عَلَيْنَا ۚ إِنَّكَ أَنْتَ التَّوَّابُ الرَّحِيمُ ۝ رَبَّنَا وَابْعَثْ
فِيهِمْ رَسُولًا مِنْهُمْ يَتْلُوا عَلَيْهِمْ آيَاتِكَ وَيُعَلِّمُهُمُ الْكِتَابَ وَالْحِكْمَةَ
وَيُزَكِّيهِمْ ۚ إِنَّكَ أَنْتَ الْعَزِيزُ الْحَكِيمُ ۝

ரப்(B)பனா தகப்(B)பல் மின்னா இன்னக அன்தஸ் ஸமீவுல் அலீம். ரப்(B)பனா வஜ்அல்னா முஸ்லிமைனி லக்க வமின் துர்ரிய்யத்தினா உம்மத்தம் முஸ்லிமதன்(ல்) லக வஅரினா மனாஸிகனா வதுப்(B) அலைனா இன்னக அன்தத் தவ்வாபு(B)ர் ரஹீம். ரப்(B)பனா வப்(B)அஸ்ஃபீஹிம் ரஸூல(ன்)ம் மின்ஹும் யத்லூ அலைஹிம் ஆயாத்திக வயுஅல்லிமுஹுமுல் கிதாப வல்ஹிக்மத்த வயுஸக்கீஹிம் இன்னக அன்த்தல் அஜீஸுல் ஹகீம்.

பொருள்: ''எங்கள் இறைவனே! எங்களுடைய இப் பணியை ஏற்றுக் கொள்வாயாக. நிச்சயமாக நீதான் எல்லா வற்றையும் செவியேற்பவனாகவும், நன்கறிபவனாகவும் இருக்கின்றாய். எங்கள் இறைவனே! மேலும் எங்கள் இருவரையும் உனக்கு முற்றிலும் கீழ்ப்படிந்தவர்களாய் - முஸ்லிம்களாய் ஆக்கி வைப்பாயாக! மேலும் எங்கள் வழித்தோன்றலிலிருந்து முற்றிலும் உனக்குக் கீழ்ப்படிந்து வாழும் ஒரு சமூகத்தைத் தோற்றுவிப்பாயாக! நாங்கள் நிறைவேற்ற வேண்டிய வழிபாட்டு முறைகளை எங்களுக்குக் காண்பிப்பா

யாக! மேலும் எங்களுடைய பாவமன்னிப்புக் கோரிக்கையை ஏற்றுக் கொள்வாயாக! நிச்சயமாக நீதான் பெரிதும் மன்னிப்பவனும், மிக்க கருணையுடையோனுமாயிருக்கின்றாய். எங்கள் இறைவனே! மேலும், இம்மக்களுக்காக அவர்களிலிருந்தே ஒரு தூதரை எழுப்புவாயாக! அவர் உன்னுடைய வசனங்களை அவர்களுக்கு ஓதிக் காட்டுபவராகவும், வேதத்தையும் ஞானத்தையும் அவர்களுக்குக் கற்றுக் கொடுப்பவராகவும் மேலும் அவர்களை (அவர்களுடைய வாழ்க்கையைத்) தூய்மைப்படுத்துபவராகவும் திகழ வேண்டும். நிச்சயமாக நீயே பேராற்றலுள்ளவனும், பேரறிவாளனுமாய் இருக்கின்றாய்.'' *(2:127 - 129)*

மர்யம் (அலை) அவர்களின் அன்னை செய்த துஆ

رَبِّ إِنِّي نَذَرْتُ لَكَ مَا فِي بَطْنِي مُحَرَّرًا فَتَقَبَّلْ مِنِّي ۖ إِنَّكَ أَنْتَ السَّمِيعُ الْعَلِيمُ ﴿٣٥﴾

ரப்(B)பி இன்னீ நதர்(த்)துலக மா ஃபீ ப(B)தனீ முஹர்ரரன் ஃபத ஃகப்(B)பல் மின்னீ இன்னக அன்தஸ் ஸமீவுல் அலீம்.

பொருள்: ''என் இறைவனே! நான் எனது வயிற்றில் இருக்கும் குழந்தையை உனது திருப்பணிக்காக அர்ப்பணிக்க நேர்ச்சை செய்துள்ளேன். எனவே இதனை (காணிக்கையை) என்னிடமிருந்து ஏற்றுக் கொள்வாயாக. நிச்சயமாக நீ நன்கு செவியேற்பவனாகவும் அறிபவனாகவும் இருக்கின்றாய்.''

(3:35)

குழந்தைப்பேறு வேண்டி ஜக்கரிய்யா (அலை) அவர்கள் கேட்ட துஆ

رَبِّ هَبْ لِيْ مِنْ لَّدُنْكَ ذُرِّيَّةً طَيِّبَةً ۚ إِنَّكَ سَمِيْعُ الدُّعَآءِ ۝

ரப்(B)பி ஹப்(B)லீ மி(ன்)ல் லதுன்க துர்ரிய்ய(த்)தன் தய்யிப(த்)தன் இன்னக ஸமீவுத்(B) துஆயி.

பொருள்: ''என் இறைவனே! எனக்குத் தூய ஒரு சந்ததியை உனது ஆற்றலால் வழங்குவாயாக. நிச்சயமாக நீயே பிரார்த்தனையைச் செவியேற்பவன்.'' (3:38)

ஈஸா (அலை) கேட்ட துஆ

رَبَّنَآ أَنْزِلْ عَلَيْنَا مَآئِدَةً مِّنَ السَّمَآءِ تَكُوْنُ لَنَا عِيْدًا لِّأَوَّلِنَا وَآخِرِنَا وَآيَةً مِّنْكَ ۖ وَارْزُقْنَا وَأَنْتَ خَيْرُ الرّٰزِقِيْنَ ۝

ரப்(B)பனா அன்ஸில் அலைனா மாயிதத்த(ன்)ம் மினஸ் ஸமாயி தகூனு லனா ஈத(ன்)ல் லிஅவ் வலினா வஆகிரினா வஆயத்த(ன்)ம் மின்க வர்ஜுக்னா வ அன்த கைருர் ராஜிஃ்ன்.

பொருள்: ''அல்லாஹ்வே! எங்கள் அதிபதியே! வானத்திலிருந்து எங்களுக்கு ஓர் உணவுத் தட்டை இறக்கி வைப்பாயாக! அது, எங்களுக்கும் எங்கள் காலத்தில் வாழ்பவர்களுக்கும்... இனி வரக்கூடியவர்களுக்கும் மகிழ்ச்சிக்குரிய வாய்ப்பாகவும் மேலும் உன்னிடமிருந்து ஓர் அத்தாட்சியாகவும் திகழட்டும்! மேலும் எங்களுக்கு ஆகாரம் வழங்குவாயாக! வழங்குவோரில் மிகச் சிறந்தவன் நீயே!'' (5:114)

முதல் மனிதர் ஆதம் (அலை) அவர்களும் அவருடைய மனைவியும் செய்த துஆ

رَبَّنَا ظَلَمْنَآ اَنْفُسَنَا ۖ وَاِنْ لَّمْ تَغْفِرْ لَنَا وَ تَرْحَمْنَا لَنَكُوْنَنَّ مِنَ الْخٰسِرِيْنَ ۝

ரப்(B)பனா ளலம்னா அன்ஃபுஸனா வஇ(ன்)ல்லம் தகுஃபிர் லனா வதர்ஹம்னா லனகூனன்ன மினல் காஸிரீன்.

பொருள்: ''எங்கள் இறைவனே! எங்களுக்கு நாங்களே அக்கிரமம் செய்து கொண்டோம். எங்களை நீ மன்னித்து எங்களுக்குக் கிருபை செய்யாவிடில் நிச்சயமாக நாங்கள் இழப்பிற்குரியவர்களாகி விடுவோம்''. (7:23)

அஃராஃபில் இருப்பவர்கள் செய்த துஆ

رَبَّنَا لَا تَجْعَلْنَا مَعَ الْقَوْمِ الظّٰلِمِيْنَ ۝

ரப்(B)பனா லா தஜ்அல்னா மஅல் ஃகவ்மில் ளாலிமீன்

பொருள்: ''எங்கள் இறைவனே! இவ்வக்கிரமக்காரர் களோடு எங்களைச் சேர்த்து விடாதே!'' (7:47)

ஷுஐப் (அலை) செய்த துஆ

رَبَّنَا افْتَحْ بَيْنَنَا وَ بَيْنَ قَوْمِنَا بِالْحَقِّ وَ اَنْتَ خَيْرُ الْفٰتِحِيْنَ ۝

ரப்(B)பனஃப்தஹ் பைனனா வபைன ஃகவ்மினா பில்(B)ல் ஹக்கி வஅன்த கைருல் ஃபாத்திஹீன்.

பொருள்: ''எங்கள் இறைவனே! எங்களுக்கும் எங்களின் சமுதாயத்தாருக்குமிடையில் சரியாகத் தீர்ப்பளிப்பாயாக! நீயே சிறப்பாகத் தீர்ப்பு வழங்குபவனாய் இருக்கிறாய்''. (7:89)

மந்திரவாதிகள் கலிமா ஓதியபின் செய்த துஆ

رَبَّنَآ اَفْرِغْ عَلَيْنَا صَبْرًا وَّتَوَفَّنَا مُسْلِمِيْنَ ۝

ரப்(B)பனா அஃப்ரிஃ அலைனா ஸப்ரன்(வ்) வதவஃப்பனா முஸ்லிமீன்.

பொருள்: ''எங்கள் இறைவா! எங்களுக்குப் பொறுமையை அருள்வாயாக! மேலும், உனக்கு முற்றிலும் கீழ்ப்படிந்த நிலையிலேயே எங்களை மரணிக்கச் செய்வாயாக''. (7:126)

மூஸா (அலை) பாவமன்னிப்புக் கோரிய துஆ

رَبِّ اغْفِرْ لِيْ وَلِاَخِيْ وَاَدْخِلْنَا فِيْ رَحْمَتِكَ ۖ
وَاَنْتَ اَرْحَمُ الرّٰحِمِيْنَ ۝

ரப்(B)பிகுஃபிர்லீ வலிஅகீ வஅத்கில்னா ஃபீரஹ்மத்திக்க வஅன்த அர்ஹமுர் ராஹிமீன்.

பொருள்: ''என் இறைவா! என்னையும், என் சகோதரரையும் மன்னிப்பாயாக! மேலும் உன்னுடைய கருணையில் எங்களைச் சேர்த்துக் கொள்வாயாக''. (7:151)

மூஸா (அலை) செய்த இதர துஆக்கள்

رَبِّ لَوْ شِئْتَ اَهْلَكْتَهُمْ مِّنْ قَبْلُ وَ اِيَّايَ ۚ اَتُهْلِكُنَا بِمَا

فَعَلَ السُّفَهَآءُ مِنَّا ۚ إِنْ هِيَ إِلَّا فِتْنَتُكَ ۖ تُضِلُّ بِهَا
مَنْ تَشَآءُ وَتَهْدِي مَنْ تَشَآءُ ۖ أَنْتَ وَلِيُّنَا فَاغْفِرْ لَنَا وَارْحَمْنَا وَأَنْتَ
خَيْرُ الْغَٰفِرِينَ ﴿١٥٥﴾ وَاكْتُبْ لَنَا فِي هَٰذِهِ الدُّنْيَا حَسَنَةً وَفِي الْآخِرَةِ
إِنَّا هُدْنَا إِلَيْكَ ۚ

ரப்(B)பி லவ் ஷிஃத அஹ்லக்தஹ¬ம் மின் ஃகப்லு வஇய்யாய அதுஹ்லிகுனா பிமா ஃபஅலஸ் ஸ¬ஃபஹாவு மின்னா இன்ஹிய இல்லா ஃபித்னதுக துளில்லு பிஹா மன்தஷாவு வதஹ்தீ மன்தஷாவு அன்த வலிய்யுனா - ஃபகுஃ பிர்லனா வர்ஹம்னா வஅன்த கைருல் கா (G) ஃபிரீன். வக்துப் லனா ஃபீ ஹாதிஹித் துன்யா ஹஸன(த்)த(ன்) வஃபில் ஆகிரத்தி இன்னா ஹ¬த்னா - இலைக்.

பொருள்: ''என் இறைவனே! நீ நாடியிருந்தால் அவர்களையும் என்னையும் முன்பே அழித்துவிட்டிருக்க முடியும்! எங்களில் சில அறிவிலிகள் செய்த தவறுகளுக்காக எங்கள் அனைவரையும் அழிக்கப் போகின்றாயா? இது உன்னுடைய சோதனையே அன்றி வேறில்லை; இதன் மூலம் நீ நாடுகின்றவர்களை வழிகெடுக்கிறாய்; இன்னும் நீ நாடுகின்றவர்களுக்கு நேர்வழியைக் காண்பிக்கின்றாய். எங்கள் பாதுகாவலன் நீயே! எனவே எங்களை மன்னித்து மேலும் எங்கள் மீது கருணை புரிவாயாக! நீ எல்லோரையும்விட அதிகம் மன்னிப்பவனாய் இருக்கின்றாய். இன்னும் எங்களுக்கு இவ்வுலகிலும் மறுவுலகிலும் நன்மையை எழுதி வைப்பாயாக! நிண்ணமாக நாங்கள் உன் பக்கம் திரும்பி விட்டோம்.''

(7:155-156)

رَبِّ اشْرَحْ لِي صَدْرِي ﴿٢٥﴾ وَيَسِّرْ لِي أَمْرِي ﴿٢٦﴾ وَاحْلُلْ عُقْدَةً مِّن لِّسَانِي

ரப்(B)பிஷ்ரஹ் லீ ஸத்ரீ வயஸ்ஸிர்லீ அம்ரீ வஹ்லுல் உக்ததன்மி(ன்)ல் லிஸானீ.

பொருள்: ''என் இறைவா! என் நெஞ்சத்தை விரிவாக்கி அருள்வாயாக! மேலும் என் காரியங்களை எனக்கு இலகு வாக்கித் தருவாயாக. நான் கூறுவதை மக்கள் புரிந்து கொள் ளும் பொருட்டு என் நாவிலுள்ள முடிச்சை அவிழ்த்து விடுவாயாக''. (20: 25-27)

رَبِّ إِنِّي ظَلَمْتُ نَفْسِي فَاغْفِرْ لِي فَغَفَرَ لَهُ ۚ إِنَّهُ هُوَ الْغَفُورُ الرَّحِيمُ ۝ قَالَ رَبِّ بِمَا أَنْعَمْتَ عَلَيَّ فَلَنْ أَكُونَ ظَهِيرًا لِّلْمُجْرِمِينَ ۝

ரப்(B)பி இன்னீ ளலம்து நஃப்ஸீ ஃபகஃபிர்லீ ஃபகஃபர லஹ¯ இன்னஹ¯ ஹ¯வல் க(G)ஃபூருர் ரஹீம் ஃகால ரப்பி பி(B)மா அன் அம்த அலைய ஃபலன் அகூன ளஹீரல் லில் முஜ்ரிமீன்.

பொருள்: ''என் இறைவா! என் மீது நானே கொடுமை இழைத்துக் கொண்டேன். என்னை மன்னித்தருள்வாயாக.'' அல்லாஹ் அவருக்கு மன்னிப்பு வழங்கினான். அவன் பெரி தும் மன்னிப்பவனாகவும் கிருபை புரிபவனாகவும் இருக் கின்றான். என் இறைவா! நீ என் மீது அருளிய இந்த உபகாரத்திற்காக இனி ஒருபோதும் நான் குற்றவாளிகளுக்கு உதவி செய்பவனாக இருக்க மாட்டேன். (28:16, 17)

رَبِّ إِنِّي لِمَا أَنْزَلْتَ إِلَيَّ مِنْ خَيْرٍ فَقِيرٌ ۝

ரப்(B)பிஇன்னீ லிமா அன்ஜல்த இலய்ய மின் கைரின் ஃபஃகீர்.

பொருள்: ''என் இறைவா! நீ எனக்கு இறக்கியருளு கின்ற நன்மை எதுவானாலும் சரி, நான் அதன் பக்கம் தேவையுடையவனாக இருக்கின்றேன்.'' *(28:24)*

இஸ்ராயீல் சந்ததியை விடுவிக்க வேண்டி மூஸா (அலை) செய்த துஆ

رَبَّنَا لَا تَجْعَلْنَا فِتْنَةً لِّلْقَوْمِ الظّٰلِمِيْنَ ۙ وَنَجِّنَا بِرَحْمَتِكَ مِنَ الْقَوْمِ الْكٰفِرِيْنَ ۝

ரப்(B)பனா லா தஜ்அல்னா ஃபித்னத்தன் லில் ஃகவ்மிள் ளாலிமீன் வநஜ்ஜினா பிரஹ்மத்திக மினல் ஃகவ்மில் காஃபி ரீன்.

பொருள்: ''எங்கள் இறைவனே! அக்கிரமம் புரியும் கூட்டத்தாருக்கு எங்களை ஒரு சோதனையாக ஆக்கி விடாதே! மேலும் நிராகரிக்கும் கூட்டத்தாரிடமிருந்து உனது கருணையால் எங்களைக் காப்பாற்றுவாயாக.'' *(10:86)*

நூஹ் (அலை) செய்த துஆ

رَبِّ اِنِّيْٓ اَعُوْذُ بِكَ اَنْ اَسْـَٔلَكَ مَا لَيْسَ لِيْ بِهٖ عِلْمٌ ۭ وَاِلَّا تَغْفِرْ لِيْ وَتَرْحَمْنِيْٓ اَكُنْ مِّنَ الْخٰسِرِيْنَ ۝

ரப்(B)பி இன்னீ அவூது பிக அன் அஸ்அலக மா லைஸ லீ பிஹீ இல்ம் வஇல்லா தகூஃபிர்லீ வதர் ஹம்னீ அகுன் (ம்)மினல் காஸிரீன்.

பொருள்: ''என் இறைவனே! எதைப் பற்றி எனக்கு அறிவு இல்லையோ அதைப் பற்றி உன்னிடம் கேட்பதை விட்டு உன்னிடத்தில் நான் பாதுகாப்புத் தேடுகின்றேன். நீ

என்னை மன்னிக்கா விட்டால் மேலும் அருள் புரியாவிட் டால் நான் அழிந்து போய்விடுவேன்''. (11:47)

رَبِّ اغْفِرْلِيْ وَلِوَالِدَيَّ وَلِمَنْ دَخَلَ بَيْتِيَ مُؤْمِنًا وَّلِلْمُؤْمِنِيْنَ وَالْمُؤْمِنٰتِ ۗ وَلَا تَزِدِ الظّٰلِمِيْنَ اِلَّا تَبَارًا ۝

ரப்(B)பிகும் பிர்லீ வலி வாலிதய்ய வலிமன் தகல பைத்திய முஃமினன் (வ்) வலில் முஃமினீன் வல் முஃமி னாத்தி வலா தஜ்தில்ளாலிமீன இல்லா தபா(B)ரா.

பொருள்: ''என் அதிபதியே! எனக்கும் என் தாய் தந்தையருக்கும், என் வீட்டில் இறைநம்பிக்கை கொண்டவ னாக நுழைந்திருக்கும் ஒவ்வொருவனுக்கும், மேலும் நம் பிக்கை கொண்ட ஆண் பெண்கள் அனைவருக்கும் நீ மன்னிப்பளிப்பாயாக! மேலும் கொடுமைக்காரர்களுக்கு அதிக அழிவைத் தவிர வேறு எதையும் கொடுக்காதே.'' (71:28)

இப்ராஹீம் (அலை) இறைஞ்சிய துஆக்கள்

رَبِّ اجْعَلْ هٰذَا الْبَلَدَ اٰمِنًا وَّاجْنُبْنِيْ وَبَنِيَّ اَنْ نَّعْبُدَ الْاَصْنَامَ ۝ رَبِّ اِنَّهُنَّ اَضْلَلْنَ كَثِيْرًا مِّنَ النَّاسِ ۚ فَمَنْ تَبِعَنِيْ فَاِنَّهٗ مِنِّيْ ۚ وَمَنْ عَصَانِيْ فَاِنَّكَ غَفُوْرٌ رَّحِيْمٌ ۝ رَبَّنَآ اِنِّيْٓ اَسْكَنْتُ مِنْ ذُرِّيَّتِيْ بِوَادٍ غَيْرِ ذِيْ زَرْعٍ عِنْدَ بَيْتِكَ الْمُحَرَّمِ ۙ رَبَّنَا لِيُقِيْمُوا الصَّلٰوةَ فَاجْعَلْ اَفْئِدَةً مِّنَ النَّاسِ تَهْوِيْٓ اِلَيْهِمْ وَارْزُقْهُمْ مِّنَ الثَّمَرٰتِ لَعَلَّهُمْ يَشْكُرُوْنَ ۝ رَبَّنَآ اِنَّكَ تَعْلَمُ مَا نُخْفِيْ وَمَا نُعْلِنُ ۭ وَمَا يَخْفٰى عَلَى اللّٰهِ مِنْ شَيْءٍ فِي الْاَرْضِ وَلَا فِي السَّمَاۗءِ ۝

ரப்(B)பிஜ்அல் ஹாதல் பலத ஆமினன் வஜ்னுப்(B) னீ வப(B)னீ அன் நஅபு(B)தல் அஸ்னாம் ரப்(B)பி இன்ன ஹுன்ன அல்லல்ன கஸீரன் (ம்) மினன்னாஸி ஃபமன் தபிஅனீ ஃப இன்னஹு மின்னீ வமன் அஸானி ஃபஇன்னக க(G)ஃபூருர் ரஹீம். ரப்(B)பனா இன்னீ அஸ்கன்து மின் துர்ரிய்யத்தீ பி(B)வாதின் கைரிதீ ஜர்யின் இந்த பைத்திகல் முஹர்ரம். ரப்(B)பனா லியுஃகீமுஸ் ஸலாத்த ஃபஜ்அல் அஃப்யிதத்தன் (ம்) மினன்னாஸி தஹ்வீ இலைஹிம் வர்ஜுக் ஹும் மினஸ் ஸமராத்தி லஅல்லஹும் யஷ்குரூன் ரப்(B) பனா இன்னக தஃலமு மா நுக்ஃபீ வமா நுஃலினு வமா யக்ஃபா அலல்லாஹி மின் ஷையின் ஃபில் அர்ளி வலா ஃபிஸ் ஸமாயி.

பொருள்: ''என் இறைவனே! (மக்காவாகிய) இந்நக ரத்தை அமைதி அளிக்கக் கூடியதாக ஆக்குவாயாக! மேலும் என்னையும் என் மக்களையும் சிலைகளை வணங்குவதிலி ருந்து காப்பாற்றுவாயாக! என் இறைவனே! திண்ணமாக, இந்தச் சிலைகள் அநேக மக்களை வழிகேட்டிலாழ்த்தி விட்டன; (என்னுடைய வழித்தோன்றல்களும் இவற்றால் வழிகெடலாம்; எனவே அவர்களில்) எவர்கள் என்னுடைய வழிமுறையின்படி நடந்தார்களோ அவர்கள்தாம் திண்ண மாக என்னைச் சார்ந்தவர்களாவர். எவர்கள் எனக்கு முர ணான வழியினை மேற்கொண்டார்களோ - திண்ணமாக நீ பெரிதும் மன்னிப்பவனாகவும் கருணை பொழிபவனாகவும் இருக்கின்றாய் - எங்கள் இறைவனே! நான் என் மக்களில் சிலரை விவசாயம் இல்லாத ஒரு பள்ளத்தாக்கில், கண்ணியத் திற்குரிய உன்னுடைய இல்லத்தருகில் குடியமர்த்திவிட் டேன். எங்கள் இறைவனே! அவர்கள் (இங்கு) தொழுகையை நிலைநிறுத்த வேண்டும் என்பதற்காக (இவ்வாறு செய்தேன்) எனவே அவர்கள் மீது அன்பு கொள்ளும்படி மக்களின் உள்ளங்களை ஆக்குவாயாக. மேலும் இவர்களுக்கு உண் பொருள்களை வழங்குவாயாக! இவர்கள் நன்றியுடையவர்க

ளாய்த் திகழக் கூடும்! எங்கள் இறைவனே! திண்ணமாக நாங்கள் மறைத்து வைக்கின்ற மற்றும் வெளிப்படுத்துகின்ற அனைத்தையும் நீ அறிவாய் - பூமியிலும் சரி வானத்திலும் சரி எந்தப் பொருளும் அல்லாஹ்வுக்கு மறைந்ததல்ல''.

(14:35-38)

رَبِّ اجْعَلْنِيْ مُقِيْمَ الصَّلٰوةِ وَمِنْ ذُرِّيَّتِيْ ۖ رَبَّنَا وَتَقَبَّلْ دُعَآءِ ۝
رَبَّنَا اغْفِرْ لِيْ وَلِوَالِدَيَّ وَلِلْمُؤْمِنِيْنَ يَوْمَ يَقُوْمُ الْحِسَابُ ۝

ரப்(B)பிஜ்அல்னீ மும்ஃகீமஸ் ஸலாத்தி வமின் துர்ரிய்யத்தீ ரப்(B) பனா வதம்ஃகப்(B) பல் துஆ ரப்(B)பனக் (G)ஃபிர்லீ வலிவாலிதய்ய வலில் மும்ஃமினீன யவ்ம யம்ஃகூமுல் ஹிஸாப்.

பொருள்: ''என் இறைவா! தொழுகையை நிலைநிறுத்து பவனாய் என்னை ஆக்குவாயாக! என் வழித்தோன்றல்களிலி ருந்தும் (தொழுகையை நிலைநாட்டுபவர்களை) தோற்று விப்பாயாக! எங்கள் இறைவனே! மேலும் எனது இந்தப் பிரார்த்தனையை ஏற்றுக் கொள்வாயாக! எங்கள் இறைவனே! எனக்கும் என் பெற்றோருக்கும் நம்பிக்கை கொண்டோர் அனைவருக்கும் கேள்வி கணக்குக் கேட்கப்படும் நாளில் மன்னிப்பை அருள்வாயாக''. *(14:40, 41)*

யூசுஃப் நபி (அலை) கேட்ட துஆ

رَبِّ السِّجْنُ اَحَبُّ اِلَيَّ مِمَّا يَدْعُوْنَنِيْٓ اِلَيْهِ ۚ وَاِلَّا تَصْرِفْ عَنِّيْ
كَيْدَهُنَّ اَصْبُ اِلَيْهِنَّ وَاَكُنْ مِّنَ الْجٰهِلِيْنَ ۝

ரப்(B)பிஸ் ஸிஜ்னு அஹப்பு இலய்ய மிம்மா யத் வூனனீ இலைஹி வஇல்லா தஸ்ரிஃப் அன்னீ கைதஹுன்ன அஸ்பு(B) இலைஹின்ன வஅகுன்(ம்) மினல் ஜாஹி லீன்

பொருள்: ''என் இறைவனே! எந்தச் செயலைச் செய்ய வேண்டுமென என்னை இவர்கள் அழைக்கின்றார்களோ அந்தச் செயலை விட சிறையே எனக்கு மிகவும் உவப்பானது. மேலும் அவர்களின் சூழ்ச்சிகளிலிருந்து என்னை நீ காப்பாற்றா விட்டால் நான் அவர்களுடைய வலையில் சிக்கி இருப்பேன்; மேலும் அறியாதவர்களில் நானும் ஒருவனாகி இருப்பேன்.'' *(12:33)*

நபி (ஸல்) மக்காவில் இருந்தபோது இறைஞ்சிய துஆ

وَقُلْ رَّبِّ اَدْخِلْنِىْ مُدْخَلَ صِدْقٍ وَّاَخْرِجْنِىْ مُخْرَجَ صِدْقٍ وَّاجْعَلْ لِّىْ مِنْ لَّدُنْكَ سُلْطٰنًا نَّصِيْرًا ۝

ரப்(B)பிஅத்கில்னீ முத்கல ஸித்கின் *(வ்)* வஅக்ரிஜ்னீ முக்ரஜ ஸித்கின் *(வ்)* வஜ் அல்லீ மின்(வ்) லதுன்க சுல்தானன் நஸீரா.

பொருள்: ''என் இறைவனே! நீ என்னை எங்கு கொண்டு சென்றாலும் உண்மையுடன் கொண்டு செல்வாயாக! என்னை எங்கிருந்து வெளியேற்றினாலும் உண்மையுடன் வெளியேற்றுவாயாக! உன் தரப்பிலிருந்து எனக்குப் பக்கபலமாக ஓர் அதிகாரத்தை வழங்குவாயாக''. *(17:80)*

குகைத் தோழர்களின் துஆ

رَبَّنَآ اٰتِنَا مِنْ لَّدُنْكَ رَحْمَةً وَّهَيِّئْ لَنَا مِنْ اَمْرِنَا رَشَدًا ۝

ரப்(B)பனா ஆத்தினா மி(ன்)ல்லதுன்க ரஹ்மத்தன் வஹய்யிஃலனா மின் அம்ரினா ரஷதா.

பொருள்: ''எங்கள் இறைவனே! உன்னுடைய பிரத்யேக அருளை எங்களுக்கு வழங்குவாயாக! எங்கள் காரியங்களை ஒழுங்குபடுத்தித் தருவாயாக''. *(18:10)*

அறிவுச் செல்வம் வேண்டி அண்ணல் நபிகளார் செய்த துஆ

رَبِّ زِدْنِيْ عِلْمًا.

ரப்(B)பி ஜித்னீ இல்மா

பொருள்: ''என் இறைவனே! எனக்கு அதிகமான ஞானத்தை வழங்குவாயாக!'' *(20:114)*

அய்யூப் (அலை) செய்த துஆ

اَنِّيْ مَسَّنِيَ الضُّرُّ وَ اَنْتَ اَرْحَمُ الرّٰحِمِيْنَ ۚ

அன்னீ மஸ்ஸனியள் ளுர்ரு வஅன்த அர்ஹமுர் ராஹிமீன்.

பொருள்: ''என்னை நோய் பீடித்து விட்டது; நீயோ கிருபை செய்வோரிலெல்லாம் கிருபையாளனாய் இருக்கின் றாய்.'' *(21:83)*

யூனுஸ் நபி செய்த துஆ

فَنَادٰى فِي الظُّلُمٰتِ اَنْ لَّآ اِلٰهَ اِلَّآ اَنْتَ سُبْحٰنَكَ ۖ
اِنِّيْ كُنْتُ مِنَ الظّٰلِمِيْنَ ۚ

ஃபனாதா ஃபில் ளுலுமாத்தி அன்(ல்) லாயிலாஹ இல்லா அன்த சுப்ஹானக இன்னீ குன்து மினள் ளாலிமீன்

பொருள்: அவர் இருள்களுக்குள் இருந்து கொண்டு இவ்வாறு இறைஞ்சினார்: ''உன்னைத் தவிர வேறு இறைவன் இல்லை; தூய்மையானவன் நீ! திண்ணமாக நான் குற்றம் செய்து விட்டேன்''. *(21:87)*

இறையடியார்களின் துஆக்கள்

رَبَّنَآ اٰمَنَّا فَاغْفِرْلَنَا وَارْحَمْنَا وَاَنْتَ خَيْرُ الرّٰحِمِيْنَ ۚ

ரப்(B)பனா ஆமன்னா ஃபகும்ஃபிர் லனா வர்ஹம்னா வஅன்த கைருர் ராஹிமீன்

பொருள்: ''எங்கள் இறைவனே! நாங்கள் நம்பிக்கை கொண்டோம்; எனவே எங்களை நீ மன்னித்து எங்களுக்குக் கருணை புரிவாயாக''. *(23:109)*

சுலைமான் (அலை) செய்த துஆ

رَبِّ اَوْزِعْنِيْٓ اَنْ اَشْكُرَ نِعْمَتَكَ الَّتِيْٓ اَنْعَمْتَ عَلَيَّ وَ
عَلٰى وَالِدَيَّ وَ اَنْ اَعْمَلَ صَالِحًا تَرْضٰىهُ وَاَدْخِلْنِيْ
بِرَحْمَتِكَ فِيْ عِبَادِكَ الصّٰلِحِيْنَ ۝

ரப்(B)பி அவ்ஸிஃனீ அன் அஷ்குர நிஃமத்தகல்லத்தீ அன்அம்த அலய்ய வஅலா வாலிதய்ய வஅன் அஃமல ஸாலிஹன் தர்ளாஹு வஅத்கில்னீ பி(B)ரஹ்மத்திக ஃபீஇபா திகஸ் ஸாலிஹீன்.

பொருள்: ''என் இறைவா! என் மீதும் என் பெற்றோர் மீதும் நீ புரிந்த உபகாரத்திற்கு நான் நன்றி செலுத்திக் கொண்டிருப்பதற்கும் நீ திருப்திப் படுகின்ற நற்செயலை செய்து வருவதற்காகவும் என்னை நீ கட்டுப்படுத்தி வைப்பா

யாக! மேலும் உன் அருளால் என்னை உன்னுடைய நல்லடி யார்களில் சேர்த்து வைப்பாயாக!'' *(27:19)*

வாகனத்தில் ஏறும்போது ஓதும் துஆ

سُبْحٰنَ الَّذِىْ سَخَّرَ لَنَا هٰذَا وَمَا كُنَّا لَهٗ مُقْرِنِيْنَ ۙ
وَاِنَّآ اِلٰى رَبِّنَا لَمُنْقَلِبُوْنَ

சுப்ஹானல்லதீ ஸக்கர லனா ஹாதா வமா குன்னா லஹு முக்ரினீன் வஇன்னா இலா ரப்(B)பினா லமுன் கலிபூன்

பொருள்: ''தூய்மையானவன்; மேலும் இவற்றையெல் லாம் எங்களுக்கு வசப்படுத்தித் தந்தவன்! இவற்றை அவன் வசப்படுத்தித் தராவிட்டால் அவற்றை வசப்படுத்தும் ஆற்றல் எங்களிடம் இருக்கவில்லை. மேலும் நாங்கள் எங்கள் இறை வனிடம் ஒருநாள் திரும்பிச் செல்லக் கூடியவர்களாவோம்.'' *(43:13, 14)*

நன்றி செலுத்திச் செய்யும் துஆ

رَبِّ اَوْزِعْنِىْٓ اَنْ اَشْكُرَ نِعْمَتَكَ الَّتِىْٓ اَنْعَمْتَ عَلَىَّ وَعَلٰى وَالِدَىَّ
وَاَنْ اَعْمَلَ صَالِحًا تَرْضٰىهُ وَاَصْلِحْ لِىْ فِىْ ذُرِّيَّتِىْ ۚ اِنِّىْ
تُبْتُ اِلَيْكَ وَاِنِّىْ مِنَ الْمُسْلِمِيْنَ ۝

ரப்(B)பி அவ்ஸிஃனீ அன் அஷ்குர நிஃமத்தகல்லத்தீ அன்அம்த அலய்ய வஅலா வாலிதய்ய வஅன் அஃமல் ஸாலிஹன் தர்ளாஹு வஅஸ்லிஹ் லீ ஃபீதுர்ரிய்யத்தீ இன்னீ துப்(B)து இலைக வஇன்னீ மினல் முஸ்லிமீன்.

பொருள்: ''என் அதிபதியே! நீ என் மீதும் என் தாய் தந்தையர் மீதும் பொழிந்த அருட்கொடைகளுக்காக (உனக்கு) நன்றி செலுத்துவதற்காகவும், உன் உவப்பைப்

பெறும் வகையில் நற்செயலைச் செய்வதற்காகவும் எனக்கு நற்பேற்றினை அளிப்பாயாக! என் பிள்ளைகளையும் நல்ல வர்களாக்கி எனக்கு ஆறுதல் அளிப்பாயாக! மேலும் நான் உன்னிடம் பாவ மன்னிப்புக் கோரி மீளுகின்றேன். மேலும் கீழ்ப்படிந்து வாழும் அடியார்களில் (முஸ்லிம்களில்) சேர்ந்த வனாகவும் இருக்கின்றேன்''. *(46:15)*

அன்ஸாரிகள் செய்த துஆ

رَبَّنَا اغْفِرْ لَنَا وَلِاِخْوَانِنَا الَّذِيْنَ سَبَقُوْنَا بِالْاِيْمَانِ وَلَا تَجْعَلْ فِىْ قُلُوْبِنَا غِلًّا لِّلَّذِيْنَ اٰمَنُوْا رَبَّنَآ اِنَّكَ رَءُوْفٌ رَّحِيْمٌ ۝

ரப்(B)பனகு(G) ஃபிர்லனா வலிஇக்வானினல்லதீன ஸப(B) ஃகூனா பில் ஈமான் வலா தஜ்அல் ஃபீ ஃகுலூபினா கி(G)ல்லல் லில்லதீன ஆமனூ ரப்(B)பனா இன்னக ரவூ ஃபுர் ரஹீம்.

பொருள்: ''எங்கள் அதிபதியே! எங்களையும் எங்களை விட முந்தி நம்பிக்கை கொண்டுவிட்ட எங்கள் சகோதரர்க ளையும் மன்னித்தருள்வாயாக! மேலும் எங்கள் உள்ளங்களில் நம்பிக்கையாளர்களின் பேரில் எந்தக் குரோதத்தையும் உண் டாக்காதே! எங்கள் அதிபதியே! நிச்சயமாக நீ மிகவும் பரிவுடையவனாகவும், பெரும் கிருபையாளனாகவும் இருக் கின்றாய்''. *(59:10)*

சோதனைகளிலிருந்து காப்புப்பெற துஆ

رَبَّنَا عَلَيْكَ تَوَكَّلْنَا وَاِلَيْكَ اَنَبْنَا وَاِلَيْكَ الْمَصِيْرُ ۝ رَبَّنَا لَا تَجْعَلْنَا فِتْنَةً لِّلَّذِيْنَ كَفَرُوْا وَاغْفِرْ لَنَا رَبَّنَا ۚ اِنَّكَ اَنْتَ الْعَزِيْزُ الْحَكِيْمُ ۝

ரப்(B)பனா அலைக்க தவக்கல்னா வஇலைக்க அனப்(B)னா வஇலைக்கல் மஸீர் ரப்(B)பனா லா தஜ்-அல்னா ஃபித்னத்த(ன்)ல் லில்லதீன கஃபரு வக்(G) ஃபிர்லனா ரப்(B) பனா இன்னக அன்தல் அஜீசுல் ஹகீம்.

பொருள்: ''எங்கள் அதிபதியே! உன்னையே நாங்கள் முழுமையாகச் சார்ந்திருக்கின்றோம். உன் பக்கமே நாங்கள் மீண்டு விட்டோம். உனது திருச்சமூகத்திற்கே நாங்கள் திரும்பி வர வேண்டி இருக்கின்றது. எங்கள் அதிபதியே! நிராகரிப்பாளர்களுக்கு எங்களை ஒரு சோதனையாய் ஆக்கி விடாதே! எங்கள் அதிபதியே! எங்கள் பாவங்களைப் பொருத் தருள்! ஐயமின்றி நீயே வல்லமை மிக்கவனாகவும், நுண்ணறி வாளனாகவும் இருக்கின்றாய்.'' *(60: 4, 5)*

முழுமை பெற துஆ

رَبَّنَآ اَتْمِمْ لَنَا نُوْرَنَا وَاغْفِرْ لَنَا ۚ اِنَّكَ عَلٰى كُلِّ شَىْءٍ قَدِيْرٌ ۝

ரப்(B)பனா அத்மிம் லனா நூரனா வக்(G) ஃபிர்லனா இன்னக அலா குல்லி ஷையின் ஃகதீர்.

பொருள்: ''எங்கள் அதிபதியே! எங்கள் ஒளியை எங்க ளுக்கு முழுமையாக்கித் தருவாயாக! மேலும் எங்களை மன்னிப்பாயாக! திண்ணமாக அனைத்தின் மீதும் நீ பேராற் றல் உள்ளவனாக இருக்கின்றாய்!'' *(66:8)*

தீங்கிலிருந்து பாதுகாப்புப் பெற துஆ

قُلْ اَعُوْذُ بِرَبِّ الْفَلَقِ ۙ۝ مِنْ شَرِّ مَا خَلَقَ ۙ۝ وَ مِنْ شَرِّ غَاسِقٍ اِذَا وَقَبَ ۙ۝ وَمِنْ شَرِّ النَّفّٰثٰتِ فِى الْعُقَدِ ۙ۝ وَمِنْ شَرِّ حَاسِدٍ اِذَا حَسَدَ ۚ۝

ஃகுல் அவூது பி(B)ரப்(B)பில் ஃபலஃக்மின் ஷர்ரி மா கலஃக் வமின் ஷர்ரிகா(G)ஸிஃகின் இதா வஃகப் வமின் ஷர்ரின் னஃப்பாஸாத்தி ஃபில் உஃகதி வமின் ஷர்ரி ஹாஸி தின் இதா ஹஸத்.

பொருள்: ''கூறுவீராக! வைகறையின் அதிபதியிடம் நான் பாதுகாப்புத் தேடுகின்றேன். அவன் படைத்துள்ள ஒவ்வொன்றின் தீங்கிலிருந்தும்! இரவுடைய இருளின் தீங்கி லிருந்தும் அது படரும் போது! முடிச்சுகளில் ஊதுகின்ற (ஆண்) பெண்களின் தீங்கிலிருந்தும், மேலும் பொறாமைக் காரர்களின் தீங்கிலிருந்தும், அவர்கள் பொறாமை கொள்ளும் போது (பாதுகாப்புத் தேடுகின்றேன்)'' *(113: 1-5)*

ஷைத்தானியத்தை விலக்க துஆ

قُلْ اَعُوْذُ بِرَبِّ النَّاسِ ۙ مَلِكِ النَّاسِ ۙ اِلٰهِ النَّاسِ ۙ مِنْ شَرِّ الْوَسْوَاسِ ۙ الْخَنَّاسِ ۙ الَّذِىْ يُوَسْوِسُ فِىْ صُدُوْرِ النَّاسِ ۙ مِنَ الْجِنَّةِ وَالنَّاسِ ۧ

ஃகுல் அவூது(B)பி ரப்(B) பின்னாஸ் மலிகின்னாஸ் இலாஹின்னாஸ் மின் ஷர்ரில் வஸ்வாஸ் அல்கன்னாஸ் அல்லதீ யுவஸ்விஸ¬ஃபீ ஸ¬துரின்னாஸி மினல் ஜின்னத்தி வன்னாஸ்.

பொருள்: ''கூறுவீராக! மக்களின் அதிபதியிடம் - மக்க ளின் மன்னனிடம் - மக்களின் உண்மையான இறைவனிடம் நான் பாதுகாப்புத் தேடுகின்றேன்; திரும்பத் திரும்ப வந்து ஊசலாட்டங்களை ஏற்படுத்துபவனின் தீங்கிலிருந்து. அவன்

எத்தகையவன் எனில், மனிதர்களின் உள்ளங்களில் ஊசலாட்டங்களை ஏற்படுத்துகின்றான். அவன் ஜின் இனத்தைச் சேர்ந்தவனாயினும் மனித இனத்தைச் சேர்ந்தவனாயினும் சரியே''. (114:1-6)